மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இப்படி வற்புறுத்தி கேட்பது என்றால் முடியாது. அவையினுடைய கவுரவத்தை, கண்ணியத்தை, பெருமையைக் காப்பாற்ற வேண்டுமென்றால், நீங்கள் இப்படிக் கேட்க முடியாது. அப்படிக்கட்டாயப் படுத்துபவர்களை நான் அழைக்கவும் முடியாது. நீங்கள் 1 மணி நேரம் மேலும் எடுத்துக் கொள்ளுங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. முன் வரிசையில் இருப்பவர்கள் முடிவெடுக்கட்டும், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

குலசேகரப்பட்டினம் துறைமுகம்.

*வினா எண் 290—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

குலசேகரப்பட்டினம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—திருச்செந்தூர் தாலுக்காவில் உள்ள குலசேகரப்பட்டினம் துறைமுகம் 1972 ஆம் ஆண்டில் மூடப்பட்டு விட்டது. அத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குலசேகரப்பட்டினம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யக் கோரி பல முறை இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் கூட கேள்வி எழுப்பியிருக்கிறார். அங்கே இருக்கிற பொது மக்களும் இந்தத் துறைமுகம் திறக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு இந்தத் துறை முகத்தில் எந்தவித போக்கு வரத்தும் இல்லாத நிலை தொடர்ந்து இருந்து வருகிற காரணத்தால், 1970 ஆம் ஆண்டு சுங்க இலாகா அதை மூடலாம் எனக் கருத்து தெரிவித்து, 1972 ஆம் ஆண்டு அது மூடப்பட்டது. அப்பகுதிக்கு அருகிலே இருக்கிற தூத்துக்குடி துறைமுகம் பெரிய துறைமுகமாக வளர்ச்சி அடைந்து வருகிற காரணத்தால் இத்துறைமுகத்தை மீண்டும் திறப்பதற்குரிய வாய்ப்பில்லை.

1979 மார்ச் 8]

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, குலசேகரப் பட்டினம், குலசேகரபாண்டியன் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்த நகரம். இதனால் தான் குலசேகரப்பட்டினம் என்ற பெயர் கொண்டது என்ற வரலாற்றுப் பெருமை இந்நகருக்கு உண்டு. இங்கிருந்து, இறால், சங்கு, கருவாடு, வெங்காயம், கருப்புக்கட்டி போன்ற பல பொருட்கள் ஏற்றுமதியாயிருக்கின்றன. அதற்குரிய பண்டகசாலையும் இன்னமும் இருக்கிறது. ஆகவே, வரலாற்று சிறப்புமிக்க அதனைத் துறைமுகமாக மாற்றுவதற்கு எல்லா வாய்ப்பும் வசதியும் உள்ளது. ஆதலால், பெரிய துறை முகமாக இல்லாவிட்டாலும், அப்பகுதி மக்களின் நன்மையைக் கருதி சிறிய மீன்பிடித் துறைமுகமாக மாற்றுவதற்கு அரசு முன் வருமா ? அது பற்றிய ஆய்வை அரசு நடத்துமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல், குலசேகரப்பட்டினத்திற்கு அருகிலேயே உள்ள வீரபாண்டியல் இறால் மீன், அதுவும் தரமான இறால் மீன் அதிகமாக இருப்பதாகத்தான் கணக்கெடுத்திருக்கிறார்கள். அதனால், மீனளத் துறை இதை ஆய்வு செய்து மீன்பிடி துறைமுகத்தை வளர்க்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருக்கிற இறால் மீன்கள் தமிழகத்திலேயே தரமானவை. அதிலும் குறிப்பாக, டுணா என்ற மீன்—வெளிநாட்டுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்கிற அந்த மீனும் அந்தப் பகுதியிலே அதிகம் கிடைக்கிற காரணத்தால், தொழில் துறையாக இதை விரிவு படுத்தும் நோக்கத்தோடு, மத்திய அரசை மீன்பிடி துறை முகமாக மாற்றக் கேட்டு பரிசிலனை செய்யப்படும்.

போளூர்-ஆலங்காயம் மலைச் சாலை

*வினா எண். 291—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரிலிருந்து ஓம்னாமத்தூர் வழியாக மலைப்பகுதியில் ஆலங்காயம் வரை தார் சாலை போடும் வேலையை எடுத்து செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) உண்டு.

(ஆ) மத்திய அரசு அனுமதித்த தொகை ரூபாய் 75 இலட்சங்கள். வேலை புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.